# திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு.

பொருள் :

எழுத்துக்கள் எல்லாம் “அ“ என்ற எழுத்தை முதலாவதாகக் கொண்டு அமைந்திருப்பதைப் போல் உலகத்து உயிர்கள் எல்லாம் இறைவனை முதலாவதாகக் கொண்டுள்ளன.

2. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
   நிலமிசை நீடுவாழ் வார்.

பொருள் :

பக்தர்களின் மனமென்னும் மலரில் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள் இந்த உலகில் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.

பொருள் :

குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் அன்புடனும் உதவும். மனப்பான்மையுடனும் நடந்து கொண்டால் அந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியும், பெருமையும் குறைவதில்லை.

4. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
   இறைவன் அடிசேரா தார்.

பொருள் :

ஆண்டவனின் திருவடிகளை அடைந்தவரால் பிறவி என்ற பெரிய சமுத்திரத்தைக் கடக்க முடியும். மற்றவர்கள் திணறுவார்கள்.

www.kids.noolagam.com